★ விலை ரூபா 1:00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 2 ஜுல்கஃ 8 இதழ் 186

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18—8—83

## "இலங்கை சமரசப் பேச்சுவார்த்தைகள்: இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பூரண ஆதரவு வழங்க வேண்டும்"

### ராஜ்ய சபையில் நரசிம்மராவ்

புதுடில்லி, ஆக. 17

''இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகள் மீதான பேச்சுக்களை சுமுகமாக நல்லெண்ணத்தோடு வெற்றிபெறச்செய்ய இந்திய பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களும் பூரண ஆதரவு வழங்கவேண்டும்'' என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

ராஜ்ய சபையில் நேற்று இலங்கை விவகாரம் தொடர்பாக ஆறுமணி நேரம் விவாதமொன்று நடைபெற்றது.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. நரசிம்மராவ் மேலும் தெரிவித்ததாவது:

''இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் வாய்ப்பு இந்திய அரசின் தலையீட்டையடுத்து கணிசமாகக் காணப்படுகிறது என்று இலங்கை தமிழர்விடுதலைக்கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். எனவே இந்திய பாராமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் பேச்சுக்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

''இலங்கையில் தமிழர்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் பேச்சுக்களுக்கு முன்வந்துள்ள இலங்கை அரசாங்கமும், திரு.

(2-ம் பக்கம் பார்க்க)

# காணமல்போன ஜப்பான் தொலைத் தொடர்பு நவீன கருவிகள் தடைசெய்யப்பட்ட இயக்கத்திடமா?

## உயர் அதிகாரி விசாரணையில்

(கொழும்பு)

ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட நவீன தொலைதொடர்பு ''எலக்ரோனிக்'' கருவிகள், தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றுக்குக் கைமாறியிருக்கலாம் என்ற சந்தேகம் இரகசியப் பொலிஸாருக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது! முப்பத்து ஒருலட்சம் ரூபாய் பெறுமதிவாய்ந்த இக் கருவிகள் காணமற்போனது சம்பந்தமாக தொலைத் தொடர்புச்சேவைத் திணைக்கள உயர்அதிகாரி ஒருவர் இரகசியப் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளுடன் தொடர்புகளை வைத்துக்கொள்வதற்கு மேலும் பயன்படக்கூடிய வகையில் இந்தச் சக்திவாய்ந்த கருவிகளைத் தடைசெய்யப்பட்ட இயக்கம் பெற்றுக்கொள்வதற்கு இந்த உயர் அதிகாரி உதவியிருக்கிறார் என்ற குற்றச்சாட்டின்பேரில் நான்காவது மாடியில் இரகசியப் பொலிஸாரால் விசாரிக்கப்படுவதாகத் தெரிகிறது.

சமீபத்தில், தொலைத் தொடர்புச் சேவைத் திணைக்களத்தின் உபயோகத்திற்காக இந்தப் பெறுமதிவாய்ந்த கருவிகள் ஜப்பான் நாட்டில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்டு, களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. திடீரென்று இவை காணமல்போனதை யடுத்து விசாரணைகள் நடந்தது. இதனையடுத்து, குறிப்பிட்ட உயர்அதிகாரி இரகசியப் பொலிஸாரால் அழைத்துச்செல்லப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

இதுசம்பந்தமாக 30 ஊழியர்கள் விசாரிக்கப்படுகிறார்கள்.

## விசேட தூதரை பாரதம் அனுப்பும்

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கும் தமிழ்த்தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடப்பதற்கு வசதியாக விசேட தூதுவர் ஒருவரை அனுப்ப பாரதம் தயாராக இருப்பதாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்,

இலங்கை விவகாரம் தொடர்பாகவும், இலங்கையின் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ, அமிர்தலிங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்தும் திருமதி காந்தி நேற்று முன்தினம் ராஜ்ய சபையில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றினர்.

அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைஎப்போது எவ்விதம் நடைபெற வேண்டும் என்பது இலங்கை அரசை பொறுத்தது என்று தெரிவித்த திருமதி காந்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''இலங்கையில் தமிழ் மக்களுக்குப் பத்திர உணர்வை ஏற்படுத்துவதே தற்போதைய உடனடித் தேவையாகும். அதேவேளையில் இப்பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டியதும் அவசரம்.

''அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்திருந்தபோதிலும் இந்தியாவின் தலையீட்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத்தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆதரவுவழங்கவில்லை

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 17

இலங்கைத் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் புகலிடம் வழங்கப்படுகின்றது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்த கருத்தை இந்திய வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் இந்த மறுப்பைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''இந்தியா இலங்கை வடபகுதி தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கவில்லை. தென்னிந்தியாவிலிருந்து அவர்கள் இயங்கி வருகிறார்கள் என்ற தகவலும் தவறானது. தீவிரவாதிகள் என்று கருதப்பட்டவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டே உள்ளனர். அத்துடன் அவர்கள் நடவடிக்கைகளையும், அவர்களைச் சேர்ந்தவர்களது நடவடிக்கைகளையும் இந்திய அரசு கண்காணித்துவருகின்றது.

''எதிர்காலத்திலும் இலங்கைத் தீவிரவாதிகள் என்று கருதப்படுவோர் மீது இந்திய அரசாங்கம் கண்காணிப்புக்களை மேற்கொள்ளும். அத்துடன் கைதுசெய்யப்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அவர் தெரிவித்தார். (கி)

## தபால் நிலையத்தில் ஒய்வூதியம்

(கரவெட்டி)

கரவெட்டி தபால்நிலையத்திலிருந்தும் அதன்கீழ் இயங்கிவரும் உபதபால் நிலையங்களிலிருந்தும் இதுவரை ஓய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கும் இன்று முதல் பருத்தித்துறை தபால் நிலையத்தில் ஓய்வூதியம் வழங்கப்படும் என தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கரவெட்டி தபால்நிலையத்தின் கீழ் 8 உபதபால் நிலையங்கள் இயங்கி வந்தன. கரவெட்டி தபால் நிலையத்தில் அண்மையில் கொள்ளை இடம் பெற்றதை அடுத்து அத்தபால் நிலையமும் ஏனைய 8 உபதபால் நிலையங்களும் மூடப்பட்டது தெரிந்ததே.

## செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## மட்டு. மாநகர சபை வன்செயல்களைக் கண்டித்துத் தீர்மானம்

(உதயகுமார்)

நாட்டில் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான வன்செயல்களைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று மட்டக்களப்பு மாநகர சபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மாநகர முதல்வர் திரு. அம்பலவாணரின் தலைமையில் நடைபெற்ற இவ் விசேடக்கூட்டத்தில் உறுப்பினர் திரு. பாலசிங்கத்தால் முன்மொழியப்பட்ட இத் தீர்மானத்தில் பாதிப்படைந்த மக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொளளப்பட்டது.

வெலிக்கடைச் சிறையில் தமிழ்க் கைதிகள் கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்தும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## இன்று முதல் பஸ் கட்டணம் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் கட்டணங்கள் இன்று மூதல் அதிகரிக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா, தி.மு.க.பிரமுகர்கள் புதுடில்லியில் சந்திப்பு!

புதுடில்லி, ஆக. 17

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் தமிழக தி. மு. க பிரமுகர்களான திரு. முரசொலிமாறன், திரு. தண்டாயுதபாணி ஆகியோர் இலங்கை விவகாரம் சம்பந்தமாக நேற்று புதுடில்லியில் உரையாடினர்.

இந்த உரையாடல் இலங்கை த. வி. கூட்டணிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் இரண்டாவது தடவையாக இந்தியப் பிரதமரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தமுன்னர் இடம் பெற்றது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கவனத்துக்கு இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தைக் கொண்டுவரவேண்டும் என்று தி. மு. க. பிரமுகர்கள் இருவரும் பிரதமர் திருமதி காந்தியிடம் தெரிவித்தனர். அத்துடன் இலங்கைத் தமிழர்கள் எதிர்காலத்தில் மீண்டும் மோசமாக பாதிக்கப்படாத வகையில் இந்தியா நடவடிக்

(2-ம் பக்கம் பார்க்க)

## தொழில்நுட்பக்கல்லூரி இறுதிப் பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் ஜுலை மாதம் 28ம் திகதி நடக்கவிருந்த இறுதிப்பரீட்சைகள் யாவும் இன்று 18ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இன்று தொடங்கவிருக்கும் பயிற்சிநெறிகள்:

1. தேசிய உயர் கணக்கியல் தகுதித்தேர்வு 3ம் வருடம்.
2. தேசிய உயர்வணிகப்பகுதித் தேர்வு 3ம் வருடம்.
3. தொழில் பயிற்சி நெறிகள். (சு)

## முக்கிய அறிவித்தல்

### மின்விநியோகம்

1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி தொடக்கம் பகல் 12-00 மணிவரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு அனுராதபுரம்-யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் கிளிநொச்சி, பரந்தன். மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுன்னாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ். பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகின்றேன்.

மின் பொறியியலாளர்,
(யாழ். பிரதேச அலுவலகம்)
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

8249

# வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சிவன்பண்ணை வீதியில் அமைந்துள்ள ஈகிள் அச்சகத்திற்கு அண்மையில் (14-8-83) ஞாயிற்றுக்கிழமை காலை திறப்புக்கோர்வை (2 திறப்புகள்) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயதுவுசெய்து ஈகிள் அச்சகத்தில் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். 8230

22-7-83 யாழ்நகரில் எனது டொலர் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும் அல்லது தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். R. சுரேஷ் ''தேவி மில்'' திருநெல்வேலி. 8228

எமது அடையாள அட்டை (No; 600722107U) 15-8-83ல் யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் தயவுசெய்து தகவல் தரவும். ஜி. பாஸ்கரன் பலாலிறேட், கோண்டாவில்-கிழக்கு. 8227

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோர் பொலிஸ் நிலைய வீதி. இரு பக்கமும் பாதையுள்ள 5 பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு க. சங்கரமூர்த்தி ஞானவாசம் பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி. 8231

சாவகச்சேரி பஸ்நிலையம், பாடசாலை புகையிரத நிலையம், ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்பு காணி புதிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார, தண்ணீர் வசதியுண்டு. ''பரம்ஸ்'' நியூமார்க்கட், சாவகச்சேரி, அல்லது ப.கனகரட்ணம், சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 8162

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3000 வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

முடிவுத்திகதி; 20-8-83

விண்ணப்பகாரர் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
16-8-83. 8237

### CLASSES

ICMA-SA 1 and CA 1 revision for groups. Contact D. Kajenthira, "Prabath", Palaly Road, Kondavil, Telephone: 22028. (8238)

### கல்வி

யாழ்ப்பாண கல்வி நிலையத்தில் வகுப்புகள் வழமை போல் நடைபெறுகின்றன. பழைய மாணவர்கள் உடன் வகுப்புகளுக்கு வரவும். பின்வரும் வகுப்புகளில் புதிய மாணவர்கள் சேரலாம். o/L 83 / 84 சுருக்கெழுத்து, ரைப்பிங், ஆங்கிலம் / தமிழ் மூலம் A/L 84/85 விஞ்ஞானம், கணிதம் வெல்டிங் வயறிங் மோட்டார் மெக்கானிசம் உடன் தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 8220

### தவறிவிட்டதா?

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்கு கடந்த சனிக்கிழமை மாலை புறப்பட்டுச் சென்ற மினிபஸ்ஸில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிளாஸ்ரிக் பை (பல பொருள்களுடன்) என்னிடம் உள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும். யாழ் பிஸ்சிங் நைலோன் சென்ரர், 33, புதிய மேற்கு மார்க்கற், யாழ்ப்பாணம். 8239

### இலங்கை சமரச...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அ. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியினரைவிட வேறு எவராலும் இலங்கைத் தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்று தெரிவித்துள்ளது.

''ஆகையினால் இந்த இரு சாராரையும் சமரச முடிவுகளை எட்டும் வகையில் நடத்திச் செல்லுவது இந்திய அரசாங்கத்தின் பாரியபொறுப்பாகும்.

''இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கும், இந்திய வம்சாவழியினருக்கும் உதவும் நடவடிக்கைகளை இந்தியா தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது. இதுவரை 100 தொன்களுக்கும் மேற்பட்ட உதவிப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப்பொருட்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாகவேபாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகம்செய்யப்படுகின்றன'' என்றார். (இ)

DOCTORS AND NURSES WANTED

Following Medical Officers are required for Green Memorial Hospital, Manipay.

DOCTORS

1. Physician. 2. Surgeon
3. Anaesthetist or H. O. with Anaesthetic Training.

NURSES

1. Registered General Nurses
2. Theatre Nurse

Please apply with full Bio-data before 31-8-1983 salary negotiable.

Actg. MEDICAL SUPERINTENDANT,
Green Memorial Hospital,
16th August 83. Manipay. 8233

★ கிளிநொச்சி கொள்ளைகள்:

# பல லட்சம் ரூபா பொருட்கள் மீட்பு; நால்வர் கைது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சமீப காலங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக நால்வர் கைதுசெய்யப்பட்டதுடன் பல லட்ச ரூபா பெறுமதியான பொருட்களும் பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 13ம் திகதி கிளிநொச்சிப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து கிளிநொச்சியைச் சேர்ந்த பொன்னையா - தங்கராசா, அருணாசலம் செல்லத்துரை, முருகேசு பத்மநாதன், வவனியாவைச் சேர்ந்த நாகராசா பரந்தாமன் ஆகிய நால்வரையும் கைதுசெய்து விசாரணை செய்தபோது பல லட்சம் ரூபா பெறுமதியான பின்வரும் பொருட்கள் மீட்கப்பட்டன.

ஏப்ரல் மாதம் 4ம் திகதி கிளிநொச்சி சிவானந்தன் என்பவர் வீட்டை உடைத்துத் திருடப்பட்ட 4500 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி, புடவைகள்—

ஜூன் 15ம் திகதி ஆனந்தபுரத்தில் தையற்பயிற்சிப் பாடசாலையை உடைத்துத் திருடப்பட்ட 3258 ரூபா பெறுமதியான தையல் உபகரணங்கள், புடவைகள்—

ஜூன் 27ல் கிளிநொச்சி பொன்னம்பலம் வீட்டை உடைத்துத் திருடப்பட்ட 2500 ரூபா பெறுமதியான சைக்கிள், ஏனைய பொருட்கள்—

மே 25ல் பரந்தன் அரச நெற்பண்ணை முகாமையாளர் திருமதி பத்மநாதன் என்பவர் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட 39900 ரூபா பெறுமதியான தங்க நகைகள், புடவைகள், வானொலிப் பெட்டி—

ஏப்ரல் 23ல் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் அதிபர் அறையை உடைத்துத் திருடிய 2236 ரூபா பெறுமதியான அலுவலக உபகரணங்கள்—

அதே இரவு பாடசாலைப் பல் வைத்தியப் பிரிவுத் தாதி செல்வி சந்திரசேகரத்தின் பல் வைத்தியப் பிரிவு அறையை உடைத்துத திருடிய 12,000 ரூபா பெறுமதியான பொருட்கள்—

ஜூலை 31ல் பரந்தன் செல்லையா என்பவர் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட 26000 ரூபா பெறுமதியான சைக்கிள், நெல் மூடைகள்—

ஜூலை 30ல் பரந்தனில் சட்டத்தரணி திருமதி மகாலிங்கம் என்பவர் வீட்டில் களவாடப்பட்ட 256-30 ரூபா பெறுமதியான நகைகள், வானொலிப் பெட்டி, தட்டச்சு இயந்திரம் போன்ற பொருட்கள் மீட்கப்பட்டன. அத்தோடு—

இம்மாதம் 1ம் திகதி கிளிநொச்சி பிரதான வீதியில் இருக்கும் துரைசிங்கம் என்பவரின் கடையை உடைத்துத் திருடிய 21825 ரூபா பெறுமதியான பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவை யாவும் வவனியா, மன்னர், யாழ்ப்பாணம், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இன்ஸ்பெக்டர் எஸ்.பி. ரணசிங்கா தலைமையில் சார்ஜன்ட் இ. திருவளங்கம், என். சண்முகநாதன், இ. பாலசிங்கம், கான்ஸ்டபிள்கள் ஸ்ரீவர்மராசா, கோபாலகிருஷ்ணன், வினயகமூர்த்தி, இராஜசிங்கம் ஆகியோரே இக்கொள்ளையர்களைக் கைதுசெய்து கொள்ளைப் பொருட்களை மீட்டனர். (சூ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் 351 கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வயித்திலிங்கம் செல்லையா கைம்பெண் செல்லம்மா என்பவரது மரண சாதனத்தினதும் எழுத்தாவணத்தினது விடயத்தில் (மரணமெய்தியவர்)

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல: 3725/T

செல்லையா சந்திரசேகரம்
இல: 351 கே. கே. எஸ்.
வீதி யாழ்ப்பாணம்.
மனுதார்

எதிராக

செல்லையா சண்முகராசா
இல: 351, கே. கே. எஸ்.
வீதி, யாழ்ப்பாணம்.
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனதத்துவ வழக்கு மேலே பெயர்குறிப்பிட்ட இறந்து போனவரது மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1983ம் ஆண்டு ஆவணிமாதம் 26-ம் திகதி காலை 9 மணிக்கு இந் நீதிமன்றத்திற்கு முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றத்தின் ஆணைப்படி
**தா. குலஞானம்,**
பதிவாளர்.

1983-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ம் திகதி

வரைந்தவர்
க. செ. சோமசேகரம்
மனுதாரின்
சட்டத்தரணி.

8235

## ''சட்டம், ஒழுங்கு தவறிய நாட்டில் உல்லாசப் பயணிகள் வருகை குறைவடையும்!''

### 'பாட்டா' அதிகாரி கருத்து

(கொழும்பு)

''சட்டம், ஒழுங்கு ஆகியன சீர்குலைந்த நிலையில் குழப்ப நிலைக்குள்ளாயிருக்கும் ஒருநாட்டுக்கு உல்லாசப் பயணிகள் வருகை தருவதைக் குறைத்துக் கொள்ளார்கள்'' என்று பசுபிக் பிராந்திய உல்லாசப்பயண ஸ்தாபனத்தின் (பாட்டா) உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரி 'பாட்டா' சர்வதேச மகாநாடு அடுத்த வருடம் இலங்கையில் நடைபெறவிருப்பதால் அது பற்றிய ஒழுங்குகளை ஆராயும் வகையில் இலங்கை வந்துள்ளார். அவரை இலங்கை தொலைக் காட்சிச் சேவையினர் பேட்டி கண்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:- ''நீண்டகாலப் பார்வையில் இலங்கை உல்லாசப் பயணத்துறை நன்கு வளர்ந்துவந்துள்ளது. ஆனால் தற்போது இலங்கையில் எழுந்துள்ள குழப்பநிலை உல்லாசப் பயணிகள் வருகையைக் குறைக்கச் செய்வதாக இருக்கும். இந்தவருடப் பகுதியில் இலங்கைக்கு அதிகளவு உல்லாசப் பயணிகள் வருவார்கள் என்று சொல்வதற்கில்லை. அடுத்த வருடமே ஓரளவு கணிசமான வருகையை எதிர்பார்க்க முடியும்''

இலங்கை உல்லாசப் பயணத்துறை, இலங்கையில் நடைபெற்ற கலவரங்கள் குறித்து வெளிநாட்டவர் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களையும் தப்பபிப்பிராயங்களையும் நீக்கும் வகையில் ஏழு உல்லாசப் பயணத்துறை பத்திரிகையாளர்களின் உதவியை நாடியுள்ளது. இவர்கள் அனைவரும் ஜெர்மன் நாட்டவர்கள். தற்போது இலங்கை வந்துள்ள இவர்கள் இலங்கை பற்றி சிறந்த பிரசாரங்களை மேற்கொள்ளுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## அடிக்கல்நாட்டு வைபவமும் சமயதீட்சையும்

(யாழ்ப்பாணம்)

உருத்திரபுரம் சிவாலய மூலமூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் அடிக்கல்நாட்டு வைபவம் இம்மாதம் 22ம் திகதி காலை நடைபெறவுள்ளது.

இம்மாதம் 18ம் திகதி காலை கிளிநொச்சி இரத்தினபுரம் விநாயகர்ஆலயத்திலும், உருத்திரபுரம்சிவாலயத்திலும் 9வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்களுக்கு சமயதீட்சை நடைபெறுமென கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தினர் தெரிவித்துள்ளனர்.

## 'அமிரு'க்கு இந்திரா பாராட்டு

(புதுடில்லி)

இலங்கை எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கத்தை இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி பாராட்டியுள்ளார்.

இந்திய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பிரதமர் திருமதி காந்தி உரையாற்றும்போது இலங்கை விவகாரம் தொடர்பான திரு. அமிர்தலிங்கத்தின் ராஜதந்திர போக்கை தான் பாராட்டுவதாக குறிப்பிட்டார்.

### இந்திரா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும்தெரிவித்தனர்.

திருமதி இந்திராகாந்தி இதற்குப் பதிலளிக்கையில், ஐ. நா. ஸ்தாபனத்தின் கவனத்துக்கு இலங்கை விவகாரத்தை கொண்டுவருவதால் எழும் நெருக்கடிகளையும் விளைவுகளையும் எடுத்துவிளக்கினார். அத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண இந்தியா தொடர்ந்துஉழைக்குமென்றும் உறுதியளித்தார். (கி)

# துப்பாக்கி சுவீகரிப்பை நிறுத்தநடவடிக்கை எடுங்கள்!

## ஜனாதிபதியிடம் வவனியா எம். பி. கோரிக்கை

(வவனியா)

வவனியா மாவட்டத்தி லுள்ள விவசாயிகளிடமிருந்து துப்பாக்கிகளைச் சுவீகரிப்பதனை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கோரியுள்ளார்.

திரு. சிவசிதம்பரம் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தந்தியொன்றைஅனுப்பிவைத்துள்ளார்.

அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

''வவனியா மாவட்டத்தில் 235 கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களில் வாழும் விவசாயிகளின் துப்பாக்கிகளைப் பறிக்கும் நடவடிக்கையை வவனியா பொலிஸ் அதிபர் எடுத்துள்ளார். இது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்விவசாயிகள் பயமின்றி தமது பயிர்களைக் காப்பாற்ற துப்பாக்கிகளைப் பறிப்பதை நிறுத்தவேண்டும். இதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தமது தந்தியில் வவனியா எம். பி. கோரியுள்ளார்.

# இன்றைய பலன்

ஆவணி 2ம் திகதி
வியாழக்கிழமை

(18—8—83)

மேடம்: பொதுமக்கள் மத்தியில் மதிப்பு உயரும், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்குஉண்டு, நண்பர்களின் ஆதரவும் உண்டு.

இடபம்: சூழ்ச்சிவலை விரிப்பதற்கு எதிரிகள் முற்படுவார்கள், மனச்சாட்சியின் படி படி நடந்து கொள்ளவும், வழக்கு விவகாரங்களில் அதிக பணம் செலவாகும்.

மிதுனம்: பசுமையான எண்ணங்கள் அலைமோதும், காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம், களஸ்திர வழியால் நன்மையான காரியம் இடம்பெறும்.

கடகம்: எண்ணியதில் தடைகள் தோன்றும், ஏமாற்றம் தாக்கும், தொழில்துறையில் நஷ்டம் ஏற்படும், விபத்திற்கு இடமுண்டு, பிரயாணத்தை பின்போடவும்.

சிங்கம்: இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, பெரியவர்களின் ஆசியும் பெருமதிப்பும் உண்டு, எதிர்பாராத பொருளும் கிடைக்கலாம்.

கன்னி: வியாபாரத்துறையில் துரிதமுன்னேற்றம் உண்டு, புதிய தொழில்கிடைக்கலாம் நண்பர்களினால் ஆதரவு உண்டு, தெய்வத்தின் அருளும் சேரும்.

துலாம்; உண்மை வழியில் நின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள்மீது பதியும் எதிர்பாராத சில விடயங்களால் நன்மை உண்டு.

விருச்சிகம்: கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கிநிற்பீர்கள் விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவேயிருக்கும் வணிகர்களாயின் முதலை மட்டுப்படுத்திக்கொள்ளவும்.

தனு: பிறரின் தலையீடு வேதனையைத்தரும் கருடப் பார்வை உங்களை வட்டமிடும் உஷார் அற்றநிலையில் இருப்பீர் டாக்டர்களின் ஆதரவு கிடைக்கலாம்.

மகரம்: கன்னல்மொழி பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள் குடும்பத்தில் அமைதி நிலவும் வரவேற்கத்தக்க காரியங்கள் இடம்பெறும் போற்றத்தக்க முன்னேற்ற முண்டு.

கும்பம்: எதிலும் அவசரக் கோலம் தென்படும் இதனால் விபரீதங்கள் விளையும் துரிதகதியில் செயலாற்றமுனைந்து தோல்வியை முத்தமிடும் பெருமையைத் தவிர்க்கவும்.

மீனம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும் கல்வித்துறையில் அதிகஈடுபாடு ஏற்படும் வாகனம்கொள் முதல் செய்யநன்மையான காலமாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# கிளிநொச்சியில் அகதிகளுக்கு வசதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு வந்துள்ள அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை பரந்தன்கிளிநொச்சி ரோட்டறிக்கழகம், வடபிரதேச சித்த ஆயுர்வேத வைத்திய சங்கம், பத்திரிகையாளர் சங்கம், மாணவர் ஒன்றியம் ஆகியவை உட்பட இப்பகுதியில் உள்ள இந்து கிறிஸ்தவ இயக்கங்களும் சமந்தி தொண்டர் இயக்கமும் நல்லமுறையில் செய்து வருகின்றன

மட்டக்குளி, வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 அகதிகள் தமது உடைமைகளை எல்லாம் இழந்தநிலையில் புகைவண்டி மூலம் கிளிநொச்சியைவந்தடைந்துள்ளனர். வண. பிதா பயஸ் அடிகளார் சென் திரேசா ஆலயத்தில் இவர்கள் அனைவரையும் தங்கவைக்க ஒழுங்கு செய்துள்ளார். வண. பிதா பயஸ் அடிகளார் அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை நேரடியாகக் கவனித்து வருகிறார்.

அகதிகள் மூவருக்கு வயிற்றோட்ட நோய்கண்டுள்ளதைத் தொடர்ந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். வேறுசிலருக்கும் வேறுநோய்கள் ஏற்பட்டு இப்பகுதித் தனியார் டாக்டர்கள் ஸ்தலத்திற்கு வருகைதந்து இலவச சிகிச்சை அளித்தனர். அகதிகளுக்கு வேண்டிய உணவு மற்றும் உதவிகள் தாராளமாக கிடைத்து வருகின்றன. அகதிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்க விரும்புவோர் புனித திரேசா ஆலயத்தில் உள்ள அகதிகள் முகாம் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறுவேண்டப்படுகின்றனர்.

## கிணற்றிலே காட்டுயானை!

(வவனியா)

காட்டுயானையொன்று கிணற்றினுள் விழுந்து உயிருக்காகப் போராடுகின்றது,

வவனியா கொம்பு வைத்த குளத்துக் கிராமத்தின் நடுவிலுள்ள கிணறு ஒன்றினுள் இந்த யானை விழுந்து நீச்சலடித்துக்கொண்டிருக்கிறது.

(அ)

## மோட்டார் சைக்கிள் கொள்ளை: சந்தேகநபர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி எமர்சன் வீதி மோட்டார் சைக்கிள் கொள்ளை வழக்கில் சந்தேக நபர்களுக்கு ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வர்த்தகர் அம்பிகைபாகன் என்பவர் இரவுவேளை கரடிப்போக்குச் சந்தியில் இருந்து பிரிந்து செல்லும் எமர்சன் வீதியால் சென்றுகொண்டிருக்கும் போது நான்கு இளைஞர்கள் வழிமறித்து பயமுறுத்தி தாக்கிவிட்டு அவரது மோட்டச்சைக்கிளை பறித்துக் கொண்டு தலைமறைவாகினார்கள்.

கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டதை தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்ட பொலிசார் கரம்பனில் வைத்து மோட்டார் சைக்கிளை கைப்பற்றினார்கள். அதன் பின் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி நீதி மன்றில் நீதவான் கே. கதிரவேற்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிரிகள் நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதைத் தொடர்ந்து இந்நால்வருக்கும் ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருடச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

## கிளிநொச்சி அகதிகள் முகாம் பாதுகாப்பு ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சென்திரேசா முகாமில் தங்கியிருக்கும் 200 அகதிகளின் பாதுகாப்புச் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

வண. பிதா பயஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வாலோசனைக்கூட்டத்துக்கு கிளிநொச்சி எம்.பி திரு ஆனந்தசங்கரி, மாவட்டசபை உறுப்பினர் கிருஸ்ணராசா, லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் க.தணிகாசலம், ரோட்டறிக் கழகச்செயலாளர் க.வை.ஜெயபாலன், கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.பி.ரணசிங்கா உட்பட 46 சமூக சேவைகள் கழகங்களும் பங்கு பற்றின.

இம்முகாமுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்து தரும்படி யாழ். அரசாங்க அதிபரை கேட்டுக்கொள்வதென்றும், இதனை ஒரு நிரந்தர முகமாக ஆக்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

முகாமுக்கு அகதிகள் வந்த வண்ணமே இருக்கின்றனர்.

(சூ)


ராணி (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
தியாகம்
(ஈஸ்ட்மென் கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

லிடோ (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் துணை
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00
சித்தி
20-8-83
ராமன் எத்தனை ராமனடி

யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.
குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.
05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!
CROSS TRAVEL SERVICES (PVT)LTD.
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair
Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

### மணிவாக்கு

நாம் இந்த உலகிற்கு ஒன்றும் கொண்டுவந்ததில்லை. இந்த உலகிலிருந்து ஒன்றையும் கொண்டு போகப் போவதுமில்லை.

— பைபிள்.

# நமது நோக்கு

## தமிழனைத் தமிழனாக வாழ வைக்கும் உரிமை

நாம் என்றும் வகுப்புவாதத்தை மனத்தாலோ, மொழியாலோ, செயலாலோ ஆதரிப்பதில்லை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பன்முறை நினைவு படுத்திய போதும் அதனைக் கேளாத காதுகளுக்கென்செய்வோம்?

இலங்கை வாழ் தமிழ் மக்கள் பிரச்னை இன்று அகில உலகிலும் பேசப்படுகிறது. அதற்குரிய விலை கொடுக்கப்பட்டுவிட்டது. உயிர், உடைமை, மானம், மதிப்பு எல்லாம் அதற்குள் அடங்கிவிட்டன.

தீராநோய்போல்வளர்ந்து வந்த இப்பிரச்னையை தீர்த்தருள வல்லவன் இறைவனென்றே நம்பவேண்டியிருக்கிறது.

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி நிற்பவன் அவன் என்று சுமார் 1235 ஆண்டுகளுக்கு முன் அறிவித்தவர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தேவாரம் பாடிய திருநாவுக்கரசர்.

மன்னனது பரந்த படையின் முன்னே தமியராய், அஞ்சா நெஞ்சினராய் நின்று அவன் மறப்படையைத் தம் ஆன்மவலியால் வென்றவர் அப்பர் அடிகள்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் பட்ட, படும்துயரங்களுக்கு இத்தகைய சான்றோரின் வீரச்செயல்களே ஆறுதலும் உற்சாகமும் அளிக்க வல்லன.

மந்திரமும் தந்திரமும் கடந்த நிலையில் இன்று மருந்தென்ன என்ற கட்டத்தில் தமிழர் விவகாரங்கள் தடைப்பட்டு நிற்கின்றன.

தந்திரங்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தடைசெய்தது வரலாற்றில் குறிக்கப்படவேண்டிய கறைபட்ட கருத்து.

தமிழ் மக்களின் அபிலாசைகள் வரலாற்று மேம்பாடுகள் பண்பாட்டின் பெருமைகள் புரியமுடியாத வெறும் புத்தகப்படிப்புடைய அரசியல் தரகர்கள் எங்கள் முன்னேற்றத்துக்குக் கால்தட்டுப்போட்டதை இன்று எவரும் அறிவர், சுயநலமே எங்கள் முதலாம் எதிரி.

பாரதம் இலங்கையின் தாய் நாடு என்று சொல்லத் தயங்கும் அறிவிலிகள் அண்டை நாடென்றாவது சொல்லட்டும். இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியா தாய் நாடென்று சொல்வது மிகப் பெருமையான காரியம். வரலாறு சான்று பகர்கின்றது.

எந்தக் கட்டத்திலும், இன்றைய இக்கட்டிலும் பேச்சுவார்த்தைகள் பயனளிக்கும் என்று இந்தியப் பிரதமர் இந்திரா கருதினால் அதற்கு நாம் மதிப்பளிக்க மறுத்தல் விவேகமல்ல.

இலங்கைஅரசியலில் இங்கு அனாதையாக வாழ்ந்துவரும் தமிழ் சமூகத்தினருக்கு நீதி வழங்கும் திட்டம் உலகிலே அரசியல் தந்திரத்தில் முதன்மைபெற்ற ஒருபெண் மணி-இந்திராவுக்கு எட்டாத காரியமல்ல.

தமிழ்மக்களைப் பொறுத்தமட்டில், இறைவனென்றாலென்ன, இந்திராவென்றாலென்ன, வேண்டப்படுவது சுதந்திர வாழ்வு, கௌரவ வாழ்வு:

எந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும், தரவாக (Data) ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை:

1. இலங்கைவாழ் மக்கள் ஒரு தேசிய சமுதாயம்; சிறுபான்மை இனமல்ல.

தணிக்கை

நாடனைத்துக்கும் பொறுப்பான மத்திய ஆட்சியில், இரு சமூகத்தவர்களும் இடம்பெறுவது நாட்டின் ஆட்சிக்கு எல்லோரும் பொறுப்பென்ற ஜனநாயக ஆட்சிமுறைக்கு பலமளிக்கிறது.

மக்கள் பாதுகாப்புக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் இந்த அடிப்படை எந்த வகையிலும் தவிர்க்க முடியாதது.

### ராஜினாமா

(புலோலி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலை ஜாதிக சேவா சங்கமய உப தலைவரான திரு வே.கணபதி தமது உப தலைவர் பதவியிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினாமாச் செய்துள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலை ஜாதிகசேவா சங்கமயத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

திரு கணபதி 3 ராஜினாமாக் கடிதத்தின் பிரதிகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபை தகவுடைய அதிகாரி, பருத்தித்துறைச்சாலை முகாமையாளர் பருத்தித்துறைச் சாலை பொறியியலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளார். (அ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்18-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## சைவமும் தமிழும் வளர்த்த எம். எஸ். இராசரத்தினம்

சைவ வித்தியாவிருத்திச்சங்கத்தின் ஆதிகர்த்தாக்கள் வீரர்கள் சேர். பொன். இராமநாதன், சேர்.பொன் அருணாசலம், சேர். வை. துரைசுவாமி, கௌரவ எஸ். இராசரத்தினம் போன்றபிரமுகர்களுடன் சைவத்திற்கும் கல்விக்கும் முன்னின்று உழைத்தவர் அமரர் எம். எஸ். இராசரத்தினம் ஆவர். அன்னாரின் பிறந்த நூற்றாண்டுஇன்று ஆரம்பமாவதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது. [ஆ-ர்]

அந்நியர் ஆட்சியின்விளைவாக, இந்த நாட்டிலே அந்நிய மத ஆதிக்கம் தலைதூக்கி நின்றது. தொன்மைப் பெருநெறியாகிய எங்கள்சைவநெறி குன்றித் தாழ்வுற்று, மங்கி மறையவும் தொடங்கியது.

அந்த வேளையில், நாவலர் பெருமான் தோன்றியதும், அந்நியமத ஆதிக்கத்தை உடைக்க முற்பட்டது, மக்கள் உள்ளங்களிலே சைவநெறி உணர்ச்சியைத் சுவாலையுற ஊட்டியதும், நாட்டிலே மகத்தான விளிப்புணர்வும் புரட்சி வேகமும் ஊற்றெடுத்துப் பொங்கியதுவுமெல்லாம் ஈழம் கண்ட புனிதப் புகழ்வரலாறேயாகும்.

நாவலர் பெருமான் தூவிய சைவவீர உணர்வாம் நல்வித்தை நாடு முழுவதும்பரந்து செழித்த ஒரு மறுமலர்ச்சி இயக்கமாக வளர்த்தெடுத்த- இந்த நாட்டில் ஆக்கத்துறையில் ஒரு புது வரலாற்றையே படைத்து வெற்றிகண்ட பெரும்பணி, Hindu Bord of Education என்றழைக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அரிய சாதனையாகும்.

இந்த மாபெரும் மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்கி நடாத்திய இப்பெரும் நிறுவனத்தின் ஆதிவீரர்களின் முன்னணியில் தலைமை சான்றவராய் மிளிர்ந்து, மட்டற்ற பாராட்டிற்குரியவராய்த் திகழ்ந்தவர், வட்டு நகரின் தவப்பெரும் புதல்வராய M. S. இராசரத்தினம் என்பதை உலகு அறியும்.

பெரிய தியாகங்களின்றிப் பெரிய காரியங்கள் எதையும் செய்து முடிக்க இயலாது என்பதை உணர்ந்த எங்கள் எம். எஸ்.இராசரத்தினம் அவர்கள் ஒருவரே' அந்த நாட்களில் தனது வழக்கறிஞர் தொழிலையும் துறந்து, சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முழுநேர ஊழியராக விளங்கினார்.

நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் சைவப் பாடசாலைகள் நிறுவிச் சைவ சமயத்தை மலரவைக்க வேண்டும் என்ற சங்கத்தின் திட்டத்தைத்தீவிரமாகச் செயற்படுத்திய வரும் எங்கள் இராசரத்தினம் அவர்களேயாகும். அவருடைய மகத்தான உழைப்பின் விளைவாக வல்லவா எங்கள் ஊரிலும் திருஞானசம்பந்த வித்தியாசாலை தோன்றியது!

இந்தத் திருஞானசம்பந்த வித்தியாசாலையைக் கட்டி முடிக்க அவர் உழைத்த அயரா உழைப்பை, அவருக்கு அந்நாளில் பக்கதுணையாய் நின்றவரில், இன்று முளராய சிலர் நன்கு அறிவர்.

'உலகறிந்த மிகப்பெரிய கல்லூரி ஒன்று எங்கள் ஊரில் இருக்கின்றது; ஆகவே ஏன் எங்களுக்கு வேறு பள்ளி' என்று எண்ணியவரையெல்லாம் எதிர்த்து வேகமாகச்சாடி, எங்கள் மத்தியில் இவ் அரிய சைவ பாடசாலையை உருவாகிக்கித் தந்த பெருமையையும் அழியாப் புகழும் இராசரத்தினத்தாருக்கே உரியன.

'இத்துணைப் பெருமைவாய்ந்த ஒரு தேசத்தொண்டரை மறந்துவிட்டோம், அன்னாரின் ஞாபகார்த்தமாக எதையும் செய்தோமில்லையே என்று நீண்டகாலமாக நம்மவரிற் பலர் கவலைப்பட்டு வந்திருக்கின்றனர் ஆகக்குறைந்த அளவிலாகுதல் ஒரு ஞாபகார்த்தம் செய்தல் வேண்டும் என்ற உணர்வு இன்று பல அன்பர்கள் மனதில் உதயமாகி இருக்கின்றது.

இவருடைய உருவப்படத்தை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் ஒளிரவைப்பதோடு, இந்த வித்தியாசாலை மூலம் எங்கள் ஊர்க் குழந்தைகளுடைய உள்ளங்களில் சைவ ஒளி மலர வைத்த இவர் நினைவாக இப்பாடசாலைக்கு மின்னொளி (Electricity) அமைத்ததும் சாலப் பொருத்தமாகும். இவ்வாறு இதுபோன்ற சமய சமூகப்பணிகள் இப்பெருமகனை நினைவுகூரும் திட்டத்தில் இடம் பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க அவர் புகழ்.

முதலியார் எஸ். சின்னத்தம்பி

## இலங்கை மக்கள் துயர் துடைப்பு நிதிக்கு வரிவிலக்கு!

புதுடில்லி, ஆக 17

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கை மக்கள் துயர் துடைப்பு நிதியத்'துக்கு வழங்கப்படும் நிதியுதவிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இத்துயர் துடைப்பு நிதிசேகரிக்கும்பணி பெரிதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 'ஸ்டேட் பாங் ஒவ் இந்தியா' வங்கி நிதிசேகரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. இந்த வங்கி இந்தியா முழுவதிலும் பல கிளைகளைக் கொண்டது. நிதி உதவிகளை காசோலைகளாக 'துயர் துடைப்பு நிதியத்'துக்கு அனுப்பிவைக்கும்படியும் தனது சகலகிளை வங்கிகளும் நிதியுதவிகளை ஏற்றுக் கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தமிழக அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு நிதியத்துக்கும் பூரண ஆதரவு கிடைத்து வருகின்றது. நேரடியாக முதலமைச்சரிடமோ அல்லது அரசிடமோ நிதியுதவியை கையளிக்க முடியாதவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அவற்றைக் கையளிக்கமுடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரவு தமது இருமாதச் சம்பளத்தை இந்த நிதியத்துக்கு வழங்கியுள்ளார். (கி)

## 22, 23-ல் சந்நிதியான் தேரும் தீர்த்தமும்

(மானிப்பாய்)

தொண்டமானாறுசெல்வச் சந்நிதி ஆலய தேர் உற்சவம் எதிர் வரும்22-ம்திகதிதிங்கட்கிழமை காலை7மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்தோற்சவம் மறுநாள் 23-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

சின்னக் கதிர்காமம் என்று பிரசித்திபெற்ற எல்லாம்வல்ல சந்நிதி முருகனின் ஆலய உற்சவம் கடந்த 9-ம் திகதி கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமாகி இப்போது தினம் உற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. நேற்று பூங்காவன திருவிழா நடைபெற்றது. 21-ம் திகதி ஞாயிறு இரவு 2 மணிக்குச் சப்பறத்திருவிழா நடக்கும்.

### சந்நிதிமுருகன் சித்திரத்தேர்

(புலோலி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகனுக்கு அமைக்கப்பட்டுவரும் சித்திரத்தேருக்கான பவளக்கால் நாட்டும் வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தில் பூசையில் வைக்கப்பட்ட அழகிய பவளக்கால் பக்தர்களால் எடுத்துவரப்பட்டு தேரில் பொருத்தப்பட்டது. இப் புதிய சித்திரத்தேர் 40 பவளக்கால்களைக் கொண்டுள்ளது. எதிர்வரும் 19ம் திகதி நடைபெறவுள்ள சித்திரத்தேர் வெள்ளோட்டத்தைத் தொடர்ந்து வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

### விசேஷதூதரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டைத் தொடர்ந்து தற்போது அங்கு நிலைமை மாறியிருக்கின்றது. பாரதத்தின் இத்தலையீட்டைத் தமிழர் தலைவர்திரு. அ. அமிர்தலிங்கமும் வரவேற்றுள்ளார்.

''இலங்கையில் நடைபெற்ற கொலைகள்பற்றியும் கொள்ளைச் சம்பவங்கள்பற்றியும்திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தபோது நான் அதிர்ச்சியடைந்தேன்'' என்று பிரதமர் குறிப்பிட்டார்.

### உதவக் கோரிக்கை

(கிளிநொச்சி)

அண்மையில் நடந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு வந்த மக்களுக்கு சகல விதமான உதவிகளையும் வழங்கும்படி லயன்ஸ் கழக 306வது பிரிவு வலயத் தலைவர் சட்டத்தரணி லயன் செ. அம்பிகைபாகன் தமது லயன்ஸ் கழகத்தினரையும் அதன் உறுப்பினர்களையும் கேட்டுள்ளார்.

### பஸ்கட்டணம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

50 சதத்திலிருந்து 4 ரூபா 75 சதம் வரையிலான டிக்கட்டுக்கு 50 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 10 ரூபா டிக்கட் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று 50 ரூபாவரையிலான டிக்கட்டுகளுக்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.